# அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிப்பவருக்கான ஆலோசனை

ஜப்பானிய அகதி அங்கீகார நடவடிக்கை பற்றிய விளக்கமும்
அகதி அங்கீகார விண்ணப்பத்துக்கான ஆலோசனையும்


Japan Association for Refugees (JAR)
அகதிக்கு உதவி செய்யும் அரசுச் சார்பற்ற நிறுவனம்

| | |
|---|---|
| Address: | Daisan Shikakura Building6F, 1–7–10, Yotsuya, Shinjuku-ku, Tokyo, 160-0004, JAPAN |
| Tel: | 0120-477-472 (அகதிக்கு இலவசம்) |
| Tel: | 03-5379-6003 |
| Fax: | 03-5379-6002 |
| Email: | info@refugee.or.jp |
| HP: | http://www.refugee.or.jp |

# பொருளடக்கம்

**I** முகவுரை: அகதி என்பது என்ன ? **3**

**II** முதலில் தெரிந்துகொள்ள வேண்டியவை **4**

1. ஜப்பானிய அகதி அங்கீகார நடவடிக்கை . . . . . . . . . . . . . . . . . . . . 4
   1) சுருக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4
   2) அகதியாக அங்கீகரிக்கப்பட்ட பிறகு வழங்கப்படும் உரிமைகள் . . . . 5
   3) ஜப்பானில் அகதியாக அங்கீகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை . . . 5
   4) அகதி அங்கீகார விண்ணப்பம் . . . . . . . . . . . . . . . . . . . . . 6
   5) அகதி அதிகாரியின் நேர்முகமும் அதன் தீர்ப்பும் . . . . . . . . . . . 6
   6) மேல்முறையீடு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 6
   7) மேல்முறையீட்டின் நேர்முகமும் அதன் தீர்ப்பும் . . . . . . . . . . . 7
   8) நிர்வாக வழக்கு / நீதிமுறை மேலாய்வு . . . . . . . . . . . . . . . . 7
2. அகதி அங்கீகாரம் பற்றிய அடிப்படையான தகவல்கள் . . . . . . . . . . . 7
   1) அடக்குமுறை என்றால் என்ன ? . . . . . . . . . . . . . . . . . . . . . 8
   2) அடக்குமுறையின் காரணம் என்ன ? . . . . . . . . . . . . . . . . . . . 9
   3) அடக்குமுறையை நிரூபிப்பது எப்படி ? . . . . . . . . . . . . . . . . . 9
3. அகதி அங்கீகார விண்ணப்பத்துக்குத் தேவையான ஆவணம் . . . . . . . . . 10
   1) விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம் எங்கே ? . . . . . . . . . . . 10
   2) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இடம் எங்கே ? . . . . . . . . . . . . . . 10
   3) விண்ணப்பத்தை எழுதுவது எப்படி ? . . . . . . . . . . . . . . . . . . 11
   4) வாக்குமூலம் (Statement) எழுதுவது எப்படி ? . . . . . . . . . . . . 11
   5) மற்ற ஆவணங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12
4. தற்காலிகமாகத் தங்கும் அனுமதி . . . . . . . . . . . . . . . . . . . . . . 13
5. மனிதாபிமான ரீதியில் தங்குவதற்கான சிறப்பு அனுமதி . . . . . . . . . . 13
6. நாடுகடத்தல் (Deportation) நடவடிக்கை . . . . . . . . . . . . . . . . . . 14
   1) குற்ற ஆராய்வு / குற்ற விசாரணை . . . . . . . . . . . . . . . . . . . 15
   2) தற்காலிக விடுதலைக்கான விண்ணப்பமும் தற்காலிக விடுதலையும் . . 15
   3) பின்பு நடக்கும் நடவடிக்கை . . . . . . . . . . . . . . . . . . . . . . 15

**III** வினாவிடை **16**

பின்னிணைப்பு **I** முக்கியமான ஜப்பான் வார்த்தைகள் **21**

பின்னிணைப்பு **II** அலுவலகத்தின் தொடர்பு **22**

# I முகவுரை: அகதி என்பது என்ன ?

அகதி அந்தஸ்து பற்றிய சர்வதேச ஒப்பந்தம் அகதி என்பது என்ன என்று கீழ்கண்டபடி வரையறுத்துள்ளது. (அகதி அந்தஸ்து பற்றிய சர்வதேச ஒப்பந்தம் 1–A–(2)).

> இனம், மதம், தேசியம், குறிப்பிட்ட சமூகக் குழுவில் சேர்ந்துள்ளமை அல்லது அரசியல் கருத்து என்கின்ற காரணங்களுக்காக, அடக்குமுறைக்கு ஆளாகி விடலாம் என்கின்ற நியாயமான பயம் உள்ளதினால், சொந்த நாட்டின் வெளியே தங்கி, சொந்த நாட்டின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவர் அல்லது அவ்வாறான பயம் உள்ளதினால் சொந்த நாட்டின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பாதவர், மற்றும் இவ்வாறான நிகழ்ச்சியின் விளைவாக முன்பு தங்கியிருந்த நாட்டின் வெளியே தங்கிருக்கும் எந்நாட்டின் குடியுரிமையும் இல்லாதவர், முன்பு தங்கியிருந்த நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாதவர் அல்லது அவ்வாறான பயம் உள்ளதினால் முன்பு தங்கியிருந்த நாட்டுக்குத் திரும்பிப் போக விரும்பாதவர். (JAR அடிக்கோடு இட்டுள்ளது.)

அகதிச் சர்வதேச ஒப்பந்தத்தின்படி அகதியாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, கீழ்கண்ட 4 நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(1) சொந்த நாட்டுக்கு வெளியே இருக்க வேண்டும்.
(2) அடக்குமுறைக்கு ஆளாகி விடலாம் என்ற நியாயமான பயம் இருக்க வேண்டும்.
(3) அப்படிப்பட்ட பயம் ஏற்பட்ட காரணம் என்றால், இனம், மதம், தேசியம், குறிப்பிட்ட சமூகச் குழுவில் சேர்ந்துள்ளமை அல்லது அரசியல் கருத்து என்ற காரணங்களாக இருக்க வேண்டும்.
(4) அப்படிப்பட்ட பயம் உள்ளதினால் சொந்த நாட்டின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அல்லது அதனை விரும்பாமல் இருக்க வேண்டும்.

## அகதியாக அங்கீகரிப்பது யார் ?

அகதி அந்தஸ்து அங்கீகரிக்கும் பொறுப்பு ஜப்பான் அரசாங்கத்துக்கு உள்ளது. அகதி அங்கீகார நடவடிக்கை பற்றிய விளக்கம் பின்வருமாறு.

# II முதலில் தெரிந்துகொள்ள வேண்டியவை

## 1. ஜப்பானிய அகதி அங்கீகார நடவடிக்கை

### 1) சுருக்கம்

1981ம் ஆண்டு ஜப்பான் நாடு அகதி அந்தஸ்து பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது. குடிநுழைவு / குடியேற்றக் கட்டுப்பாடு மற்றும் அகதி அங்கீகாரச் சட்டம் (Immigration Control and Refugee Recognition Act) அகதி அங்கீகார நடவடிக்கை பற்றி வரையறுத்துள்ளது.




Immigration வெளியிட்ட “Guide to Refugee Recognition Procedures” என்ற துண்டுப் பிரசுரத்தில் அகதி அங்கீகார நடவடிக்கை பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இப்பிரசுரம் ஜப்பான்,

ஆங்கிலம், Chinese, French, Arabic, Turkish, Burmese, Urdu, Farsi, Russian, Dari, Pashto, Korean ஆகிய மொழிகளில் கிடைக்கும்.)

**2)** அகதியாக அங்கீகரிக்கப்பட்ட பிறகு வழங்கப்படும் உரிமைகள்

அகதியாக அங்கீகரிக்கப்பட்டால் கீழ்கண்ட உரிமைகள் வழங்கப்படும்.

- சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படாமை
- ஜப்பானில் தங்குவதற்கான அனுமதி: நீங்கள் சட்ட விரோதமாகத் தங்கிருந்தாலும், சட்டவிரோதமாக வந்திருந்தாலும், அல்லது குறுகிய நாள் தங்கும் அனுமதியோடு இருந்தாலும், நீண்ட காலமாகத் தங்கக் கூடிய அனுமதி மற்றும் வேலை செய்யக் கூடிய அனுமதி பொதுவாகக் கிடைக்கும்.
- அகதிப் பயணச் சான்றிதழ்: கடவுச்சீட்டுக்கு (Passport) பதிலாக அகதிப் பயணச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய முடியும்.
- மற்ற உரிமைகள்: வேலை, கல்வி, காப்பீடு, நிதி உதவி ஆகியவற்றில் ஜப்பானியருக்குச் சமமான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**3)** ஜப்பானில் அகதியாக அங்கீகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை

சமீப காலத்தில் ஜப்பானிய அகதி அங்கீகாரம் தொடர்பான எண்ணிக்கை பின்வருமாறு (நீதித்துறையின் Immigration புள்ளிவிபரத்தின்படி).

| ஆண்டு | விண்ணப்பம் | அங்கீகாரம் | மறுப்பு | திரும்பப் பெறல் | மனிதாபிமான சிறப்பு அனுமதி |
|---|---|---|---|---|---|
| 1982 | 530 | 67 | 40 | 59 | |
| 1983 | 44 | 63 | 177 | 23 | |
| 1984 | 62 | 31 | 114 | 18 | |
| 1985 | 29 | 10 | 28 | 7 | |
| 1986 | 54 | 3 | 5 | 5 | |
| 1987 | 48 | 6 | 35 | 11 | |
| 1988 | 47 | 12 | 62 | 7 | |
| 1989 | 50 | 2 | 23 | 7 | |
| 1990 | 32 | 2 | 31 | 4 | |
| 1991 | 42 | 1 | 13 | 5 | 7 |
| 1992 | 68 | 3 | 41 | 2 | 2 |
| 1993 | 50 | 6 | 33 | 16 | 3 |
| 1994 | 73 | 1 | 41 | 9 | 9 |
| 1995 | 52 | 1(1) | 32 | 24 | 3 |
| 1996 | 147 | 1 | 43 | 6 | 3 |
| 1997 | 242 | 1 | 80 | 27 | 3 |
| 1998 | 133 | 15(1) | 293 | 41 | 42 |
| 1999 | 260 | 13(3) | 177 | 16 | 44 |
| 2000 | 216 | 22 | 138 | 25 | 36 |
| 2001 | 353 | 24(2) | 316 | 28 | 67 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2002 | 250 | 14 | 211 | 39 | 40 |
| 2003 | 336 | 6(4) | 298 | 23 | 16 |
| 2004 | 426 | 9(6) | 294 | 41 | 9 |
| மொத்தம் | 2,782 | 313(17) | | 443 | 284 |

( )இல் உள்ளது மேல்முறையீட்டுக்குப் பிறகு அங்கீகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. மொத்த எண்ணிக்கைக்கு உள்ளடங்காது.

**4)** அகதி அங்கீகார விண்ணப்பம்

எப்போது அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்ற காலவரையறை எதுவும் இல்லை. எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். ஆனால் ஜப்பானில் தற்காலிகமாகத் தங்கும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமானால் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டிருக்க வேண்டும். அதாவது ஜப்பானுக்கு வந்து சேர்ந்த நாளில் இருந்து[1] 6 மாதங்களுக்குள், அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும். இந்த நிபந்தனையைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 6 மாதங்களுக்குள் விண்ணப்பிக்காததற்கு நியாயமான காரணம் உள்ளது என்று கருதப்படும் பட்சத்தில் தற்காலிகமாக ஜப்பானில் தங்கும் அனுமதி வழங்கப்படலாம் (இதனைப் பற்றி 4ம் அத்தியாயத்தில் விவரித்துள்ளது).

**5)** அகதி அதிகாரியின் நேர்முகமும் அதன் தீர்ப்பும்

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பிறகு, அகதி அதிகாரி உங்களை நேர்முகத்துக்குக் கூப்பிடுவார். நேர்முகம் ஒரு முறை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் நடக்கும். உங்களது சட்டத்தரணி, தெரிந்தவர் போன்றவர் நேர்முகத்தில் கலந்துகொள்ள முடியாது. நேர்முகத்துக்குப் பிறகு, அங்கீகாரம் அல்லது அங்கீகாரத்தின் மறுப்பு என்ற ஒரு தீர்ப்பு அறிவிக்கப்படும். ஆனால் நேர்முகம் ஆரம்பிப்பதற்குப் பல மாதங்கள் ஆகுவதும் உண்டு. அத்தோடு தீர்ப்பு வருவதற்கும் பல மாதங்கள் ஆகுவதும் உண்டு.

**6)** மேல்முறையீடு

அங்கீகாரத்தின் மறுப்பு என்ற தீர்ப்பு வழங்கப்பட்டால், மேல்முறையீடு (மறு விசாரணையின் கோரிக்கை) செய்ய முடியும். அங்கீகாரத்தின் மறுப்பு உங்களிடம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 7 நாட்களுக்குள், மேல்முறையீடு செய்ய வேண்டும்[2]. மேல்முறையீட்டு விண்ணப்பத்தில் மேல்முறையீடு செய்வதற்கான காரணம் என்ன என்று எழுதி ஆவணத்தோடு நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும். முதலில் விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பித்துவிட்டு, அதற்குப் பிறகு காரணம் எழுதி அத்தாட்சிப்பத்திரத்தோடு சமர்ப்பிக்கலாம். ஆனால் விண்ணப்பம் 7 நாட்களுக்குள் கண்டிப்பாகச் சமர்ப்பிக்க வேண்டும். அங்கீகாரத்தின் மறுப்பு அறிவிக்கப்படும்போது, மேல்முறையீட்டு விண்ணப்பப் படிவமும் பொதுவாகத் தரப்படும். தரவில்லை என்றால், அதிகாரியிடம் கேட்டுப்பார்க்கவும்.

[1]ஜப்பானில் இருக்கும்போது, ஏதாவது நிகழ்ச்சி ஏற்பட்டு அகதியாகிவிட்டால், அந்த நிகழ்ச்சி பற்றி தெரிந்த நாளில் இருந்து.

[2]அங்கீகாரத்தின் மறுப்பு என்ற தீர்ப்பு எடுக்கப்பட்ட நாள் அல்லாமல், அந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளை வைத்து கணக்கு இடவும்.

**7)** மேல்முறையீட்டின் நேர்முகமும் அதன் தீர்ப்பும்

நீங்கள் நேர்முகம் (கருத்து வெளிப்பாடு / கேள்விநேரம்) விரும்பினால், நேர்முகத்துக்கு வரும்படி ஒரு அழைப்பு வரும். அது Immigrationஇல் உள்ள மேல்முறையீட்டுப் பிரிவில் இருந்து வரும். இந்த நேர்முகம் பொதுவாக ஒரு முறை மட்டும் நடக்கும். இந்த மேல்முறையீட்டின் நேர்முகத்தில் சட்டத்தரணி போன்றவர் கலந்துகொள்ள முடியும். அத்தோடு அகதி அங்கீகார ஆலோசகரின் கேள்விநேரத்தைக் கோர முடியும். இந்த அலோசகர் Immigrationகுச் சார்பு இல்லாத அறிஞர். கேள்விநேரத்தின்போது சில ஆலோசகர்கள் உங்களிடம் கேள்வி கேட்பார்கள். பிறகு அவர்கள் Immigarationஇடம் தங்களது ஆலோசனை (கருத்துரை) வழங்குவார்கள். மேல்முறையீடு செய்த நாளில் இருந்து 6 வாரங்களுக்குள் கருத்து வெளிப்பாட்டுக்கான வாக்குமூலம் சமர்ப்பிக்க வேண்டும். உங்களது கருத்துக்களின் வெளிப்பாடு, மொழிபெயர்ப்புக்கான நேரம், ஆலோசகரின் கேள்வி, உங்களது பதில் ஆகியவற்றைச் சேர்த்து சுமார் 2 மணி நேரம் மட்டும் நேர்முகத்துக்கு ஒதுக்கப்படும். நேர்முகம் ஒலிப்பதிவு செய்யப்படும். அத்தோடு உதவியாளர், இடைவாதி என்ற பெயரில் உங்களது நண்பர் மற்றும் மூன்றாவது தரப்பினர் போன்றவர் நேர்முகத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை வெளியிட முடியும். யாராவது கலந்துகொள்வதாக இருந்தால், யார் நேர்முகத்தில் கலந்துகொள்வார் என்பதைப் பத்திரம் மூலமாக Immigrationகு அறிவிக்க வேண்டும்.

நேர்முகத்துக்குப் பிறகு தீர்ப்பு அறிவிக்கப்படும். முதலாவது தீர்ப்பு (அங்கீகாரத்தின் மறுப்பு) தவறானது என்ற தீர்ப்பு வந்தால், அகதியாக அங்கீகாரம் கிடைக்கப் பெறும். அகதி அங்கீகார நடவடிக்கையில் இது தான் கடைசி தீர்ப்பு. முதலாவது தீர்ப்பு (அங்கீகாரத்தின் மறுப்பு) சரியானது என்று உங்களது மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டால், அதற்கு மேல்முறையீடு செய்ய முடியாது.

**8)** நிர்வாக வழக்கு / நீதிமுறை மேலாய்வு

உங்களது மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டால், நீதிமுறை மேலாய்வு கோரி வழக்குத்தொடர முடியும். மேல்முறையீட்டின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட மறுநாளில் இருந்து 6 மாதங்களுக்குள்[3] வழக்குத்தொடர வேண்டும்.

அகதி அங்கீகாரத்தின் மறுப்பு நிராகரிக்குமாறு கோரி வழக்குத்தொடரும்போது, 8,200 yen அஞ்சல் தலையும் (stamp) 6,400 yen அளவிலான முத்திரைத்தாளையும் முன்கூட்டியே நீதிமன்றத்துக்குச் செலுத்த வேண்டும்.

மற்றபடி நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர் தேவை என்றால், 10,000 yen அளவில் மொழிபெயர்ப்புக் கட்டணமும் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட வழக்குச் கட்டணத்துக்கு வசதி இல்லாத பட்சத்தில், வழக்குக்கு நிதி உதவி தருமாறு கோர முடியும்.

முதலாவது தீர்ப்பு வந்த உடனேயும் வழக்குத்தொடர முடியும். மேல்முறையீடு செய்து கொண்டிருக்கும்போதும் வழக்குத்தொடர முடியும்.

## 2. அகதி அங்கீகாரம் பற்றிய அடிப்படையான தகவல்கள்

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிப்பதற்குக் கீழ்கண்ட தகவல்கள் பயனாகும்.

[3] உதாரணமாக 1ம் மாதம் 10ம் திகதியில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டால், 7ம் மாதம் 10ம் திகதி வரை. கடைசி நாள் விடுமுறையாக இருந்தால், அதற்கு மறுநாள் வரை.

**1)** அடக்குமுறை என்றால் என்ன ?

UNHCR வெளியிட்ட அகதி அங்கீகாரப் பிரசுரத்தில், அடக்குமுறைக்கு, எல்லோரும் ஏற்கும் வகையிலான வரையறை எதுவும் இல்லை என்று எழுதியுள்ளது. ஆனால் அகதி சர்வதேச ஒப்பந்தம் 33ம் பிரிவை பார்க்கும்போது, இனம், மதம், தேசியம், அரசியல் கருத்து அல்லது குறிப்பிட்ட சமுகக் குழுவில் சேர்ந்துள்ளமை என்ற காரணமாக, உயிர், உரிமைக்கு மிரட்டல் இருந்தால், அதனை அடக்குமுறை என்று சொல்லலாம். அப்படிப்பட்ட காரணமாக நடக்கும் தீவிரமான மனித உரிமை மீறலையும் அடக்குமுறை என்று சொல்லலாம்.

அத்தோடு அடக்குமுறை என்று குறிப்பாகச் சொல்ல முடியாத பல விதமான செயல்களுக்கு (உதாரணம்: பல விதமான ஒடுக்குமுறை) நீங்கள் உள்ளாகி இருக்கலாம். சில சமயம், மற்ற பாதகமான நிலைமைக்கும் (உதாரணம்: உள்நாட்டுப் பாதுகாப்பின்மை) உட்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாவற்றையும் கொண்டே, அடக்குமுறைக்கு ஆளாகிவிடலாம் என்ற சரியான பயம் தன்னிடம் உள்ளது என்பதை நன்றாக நியாயப்படுத்தலாம். தான் அகதி என்று சொல்லும்போது, எப்படிப்பட்ட ஆதாரம் எவ்வளவு தேவை என்ற பொதுவான சட்டம் இல்லை. அது குறிப்பிட்ட இடம், வரலாறு, இனம் உள்ளிட்ட எல்லா சூழ்நிலையையும் பொறுத்து உள்ளது.

உதாரணமாகக் கீழ்கண்ட விடயங்களை அடக்குமுறை என்று சொல்லலாம்.

உயிர் / உடம்பின் பாதுகாப்பு, சுதந்திரத்தின் அச்சுறுத்தல் (இனம், மதம், தேசியம், அரசியல் கருத்து அல்லது குறிப்பிட்ட சமுகக் குழுவில் சேர்ந்துள்ளமை என்ற காரணம் தேவை )

- உயிர் / உடம்பின் ஆபத்து: உங்களது நாட்டில் நீங்கள் அரசாங்கத்தின் தாக்குதலுக்கு இலக்காக இருப்பது.
- கைது, தடுப்புக்காவல்: சட்டப்படியாக இருந்தாலும், சட்டவிரோதமாக இருந்தாலும் சரி. காவல்துறை, புலனாய்வுத்துறை, தீவிரவாதிக் குழு ஆகிய குழுக்களால் அது நடத்தப்பட்டாலும், உங்களது அரசாங்கத்துக்கு உங்களைக் காப்பாற்றுவதற்கு நோக்கமும் திறமையும் இல்லை என்று நிரூபிக்க முடியும் என்றால், அதனை அடக்குமுறை என்று சொல்லலாம். அத்தோடு கைது, தடுப்புக்காவலில் நேரடியாக சிக்காமல், அவற்றின் முயற்சியில் இருந்து தப்பித்திருந்தால் அவற்றையும் அடக்குமுறை என்று சொல்ல முடியும்.
- சித்திரவதை: பொதுவான ‘‘சித்திரவதை’’ மற்றும் அல்லாமல், தடுப்புக்காவலில் வைக்கும்போது உணவு தராமை, நித்திரைகொள்வதற்கு நேரம் தராமை ஆகியவற்றையும் சித்திரவதை என்று சொல்லலாம்.
- மிரட்டல்: உங்களை மிரட்டுவது, உங்களது குடும்பத்தினர், நண்பர் ஆகியவரை மிரட்டுவது.
- காணாமல் போவது: நீங்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போவது, உங்களது குடும்பத்தினர், நண்பர் ஆகியவர் கடத்தப்பட்டுக் காணாமல் போவது.

அன்றாட வாழ்க்கை, சொத்தின் பாதுகாப்பு, சுதந்திரம் தொடர்பாக

- சொத்தின் பறிப்பு
- வேலையின் தடுப்பு, வேலைவாய்ப்பின் பறிப்பு
- கல்விவாய்ப்பின் பறிப்பு

மற்றது

- குறிப்பிட்ட மதமாக மாறும்படி கட்டாயப்படுத்துவது, குறிப்பிட்ட மதத்தின் வழிபாட்டைக் கட்டாயப்படுத்துவது
- குறிப்பிட்ட கட்சியில் இணையும்படி கட்டாயப்படுத்துவது, குறிப்பிட்ட கட்சியில் இருந்து விலகும்படி கட்டாயப்படுத்துவது

**2)** அடக்குமுறையின் காரணம் என்ன **?**

- இனம்: சாதி, குடி போன்றவையும் உள்ளடங்கும்.
- மதம் (சமயம்)
- தேசியம்
- அரசியல் கருத்து: அரசியல் தொடர்பான உங்களது கருத்து மற்றும் நடவடிக்கையும் உள்ளடங்கும்.
- குறிப்பிட்ட சமூகக் குழுக்களில் சேர்ந்துள்ளமை: சமமான பின்னணி, பழக்கவழக்கம், சமூக அந்தஸ்து வாய்ந்த ஆட்கள் சேர்ந்துள்ள குழு. குறிப்பிட்ட சமூகக் குழுவில் சேர்ந்துள்ளமை மட்டுமே வைத்து, தான் அகதி என்று சொன்னாலும் அது போதாது. ஆனால் சில சமயம், குறிப்பிட்ட சமூகக் குழுவில் சேர்ந்துள்ளமை தான், அடக்குமுறையை நிரூபிப்பதற்குப் போதுவான ஆதாரம் ஆகலாம்.

**3)** அடக்குமுறையை நிரூபிப்பது எப்படி **?**

நடந்தது உண்மை என்பதை நிரூபிப்பது விண்ணப்பிப்பவரின் பொறுப்பு என்று UNHCRஇன் அகதி அங்கீகாரப் பிரசுரத்தில் எழுதியுள்ளது. குறிப்பாக நீங்கள் செய்ய வேண்டியவை பின்வருமாறு.

(1) நடந்தது உண்மை என்பதை நிரூபிக்கும்போது, உள்ளதை உண்மையாகப் பேச வேண்டும். அத்தோடு அகதி அதிகாரிக்கு உதவும் வகையில் பேச வேண்டும்.
(2) நீங்கள் பேசுவது உண்மை என்று சாட்சியத்தைக் கொண்டே உறுதிப்படுத்த வேண்டும். சாட்சியம் இல்லாத விடயம் பற்றி பேசும்போது, எல்லாரும் புரியும் வகையில் நீங்களே விளங்கப்படுத்தி பேச வேண்டும். தேவைப்பட்டால் மேற்கொண்டு சாட்சியத்தைச் சேகரிக்கும் முயற்சி செய்ய வேண்டும்.
(3) சம்பந்தபட்ட விடயங்கள் உண்மை என்பதை அகதி அதிகாரி புரிந்துகொள்வதற்குத் தேவையான தகவல்களைத் தர வேண்டும். தகவல் என்றால், உங்களைப் பற்றிய தகவல் மற்றும் உங்களது அனுபவம் பற்றிய தகவல் ஆகும். உங்களது கூற்றில் எந்த விதமான முரண்பாடும் வராமல் பேச வேண்டும்.

நீங்கள் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றீர்கள் என்பதை ஜப்பான் அரசாங்கத்துக்கு விவரமாக விளங்கப்படுத்துவது மிகவும் முக்கியம். உங்களது நாட்டில் அரசாங்கம் பொதுவாக மனித உரிமை மீறல் செய்வது, உங்களது நாட்டில் பொதுவாக நிலைமை சரியாக இல்லை என்று சொன்னாலும் அது போதாது. நீங்கள் தான் அடக்குமுறையின் இலக்கு என்பதை நியாயமான காரணத்தோடு விளங்கப்படுத்த வேண்டும்.

அத்தோடு Immigrationகுச் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் பிரதியை எடுத்துவைக்க வேண்டும்.

## 3. அகதி அங்கீகார விண்ணப்பத்துக்குத் தேவையான ஆவணம்

கீழ்கண்ட ஆவணங்களை ஏற்பாடு செய்யவும்.

- அகதி அங்கீகார விண்ணப்பப் படிவம் (A4 வடிவம். 9 பக்கம்.)
- வாக்குமூலம் (Statement) (இது கண்டிப்பாகச் சமர்ப்பிக்க வேண்டியது அல்ல. ஆனால் அகதி அங்கீகார விசாரணையில் மிகவும் முக்கியமானவை. குறிபிட்ட படிவம் இல்லை.)
- நீங்கள் அகதி என்பதை நிரூபிப்பதற்கான மற்ற சாட்சியம்
- உங்களது புகைப்படம் (5cm×5cm. தொப்பி போடாமல், நேர்முகமாகச் சமீப கால 2 மாதங்களுக்குள் எடுத்த படம். ஜப்பானில் தங்கும் அனுமதி இல்லாவிட்டால், 3 புகைப்படங்கள் தேவை.)

விண்ணப்பிக்கும்போது கீழ்கண்ட ஆவணங்களைக் காட்ட வேண்டும்.

- கடவுச்சீட்டு (Passport), பயணச் சான்றிதழ், தங்குவதற்கான சான்றிதழ் (இருக்கும் பட்சத்தில்)
- Alien Card (இருக்கும் பட்சத்தில்)
- தற்காலிக விடுதலையின் அனுமதி (இருக்கும் பட்சத்தில்)

எல்லாவற்றுக்கும் பிரதி எடுத்து கவனமாக வைத்திருக்க வேண்டும்.

### 1) விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம் எங்கே ?

Kanagawa மாநிலம் இல்லாத Kanto Koshin'etsu பகுதியில் (Tokyo, Saitama, Chiba, Tochigi, Gunma, Ibaraki, Yamanashi, Nagano, Niigata) நீங்கள் வசித்திருக்கும்போது, Shinagawa (Tennozu Isle)இல் உள்ள Tokyo Immigration, 3ம் மாடி, அகதி விசாரணைப் பிரிவில் விண்ணப்பப் படிவம் கிடைக்கும். அங்கே போய் அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கப் போவதாகத் தெரிவிக்கவும்.

அத்தோடு நீதித்துறையின் Website மூலமாக விண்ணப்பப படிவம் (PDF File) பெற்றுக்கொள்ள முடியும் (http://www.moj.go.jp).

படிவம் கிடைக்காவிட்டால், JARகுத் தொடர்புகொள்ளவும். எங்களது அலுவலகத்திலும் படிவம் கிடைக்கும்.

Kanagawa மாநிலம் இல்லாத Kanto Koshin'etsu தவிர மற்ற பகுதியில் வசித்திருக்கும்போது, உங்களது பிரதேசத்தில் Immigration கிளை எங்கே உள்ளது என்று பின்னிணைப்பு IIஇல் பார்க்கவும். Immigrationகுள் நீங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தால், அவ்விடத்தில் இருக்கின்ற அதிகாரியிடம் கேட்டு விண்ணப்பப் படிவம் வாங்கவும். விமான நிலையத்தில் அகதி விண்ணப்பம் பற்றிய தகவல் வேண்டுமானால், Immigration அதிகாரியிடம் கேட்டுப்பார்க்கவும். அல்லது JAR (Tel: 03-5379-6003), UNHCR (Tel: 03-3499-2075) குத் தொடர்புகொள்ளவும்.

### 2) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இடம் எங்கே ?

Immigrationஇல் உள்ள அகதி அதிகாரியிடம் சமர்ப்பிக்கவும். விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு, பற்றுச்சீட்டு வழங்கப்படும். பற்றுச்சீட்டு பொதுவாகக் கடவுச்சீட்டில் (Passport) இணைக்கப்படும். இந்தப் பற்றுச்சீட்டில் விண்ணப்ப எண் எழுதியுள்ளது. பற்றுச்சீட்டு அவசியமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதிகாரி விண்ணப்பப் படிவம் வாங்கினாலும்

பற்றுச்சீட்டு வழங்கப்படாவிட்டால், அது சட்ட பூர்வமான விண்ணப்பம் ஆகாது. அகதி அங்கீகார நடவடிக்கை முடியும்வரை இந்தப் பற்றுச்சீட்டைக் கவனமாக வைத்திருக்க வேண்டும்.

### 3) விண்ணப்பத்தை எழுதுவது எப்படி ?

விண்ணப்பத்தை எழுதும்போது, அதனில் எல்லாவற்றையும் எழுதத் தேவை இல்லை. இடத்துக்கு ஏற்ப ‘‘இதனைப் பற்றி வாக்குமூலத்தில் எழுதியுள்ளேன்’’, ‘‘இதனைப் பற்றி வாக்குமூலத்தைக் காண்க’’ என்று எழுதலாம். அல்லது எழுதுவதற்கு இடம் போதாத பட்சத்தில் வேறு தாளில் எழுதி விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கலாம்.

### 4) வாக்குமூலம் (Statement) எழுதுவது எப்படி ?

வாக்குமூலம் (Statement) என்றால் விண்ணப்பத்தில் மிகவும் முக்கியமானவை. நீங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாத காரணம் என்ன என்பதை வாக்குமூலத்தைக் கொண்டே தான் விளங்கப்படுத்த முடியும். குறிப்பாகக் கீழ்கண்ட விடயங்களை விளங்கப்படுத்தவும்.

(1) அடக்குமுறையின் விவரம்: எப்படிப்பட்ட அடக்குமுறை நடந்தது? நீங்கள் அனுபவித்தது என்ன?

(2) அடக்குமுறையின் காரணம்: நீங்கள் அடக்குமுறைக்கு ஆளாகின காரணம் என்ன? அல்லது அடக்குமுறைக்கு ஆளாகக் கூடிய காரணம் என்ன?

(3) தற்போதைய நிலைமை: நாட்டுக்குத் திரும்பிப் போனால், அடக்குமுறைக்கு ஆளாகக் கூடிய ஆபத்து உள்ளமை.

(4) மேலே குறிப்பிட்ட (1)–(3) பற்றிய விவரமான விளக்கம்: உங்களது அனுபவம் மட்டும் அல்லாமல், உங்களது குடும்பம், நண்பர், குழுக்களின் அனுபவமும் உதாரணமாகக் காட்டி விளங்கப்படுத்த வேண்டும்.

வாக்குமூலத்தில் முடிந்தவரை நிலைமை பற்றி விவரமாக எழுதவும். அதாவது நீங்கள் பிறந்ததில் இருந்து இதுவரை நிலைமை எப்படி இருக்கும் என்பதையும் எழுத வேண்டும். குறிப்பாக முக்கியமானது என்ன என்றால், நீங்கள் அனுபவித்த அடக்குமுறை தான். இதுவரை எப்படிபட்ட அடக்குமுறை, எப்போது, எங்கே, யாரால் நடந்தது என்பதை விவரமாக எழுத வேண்டும். அத்தோடு நீங்கள் அனுபவித்தது என்ன, நீங்கள் ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் விவரமாக எழுத வேண்டும்.

வாக்குமூலத்தை எழுதும்போது, ‘‘எப்போது, எங்கே, என்ன, எவர், எப்படி’’ என்று முதலில் நன்றாகச் சிந்தித்துப்பார்க்கவும். சிந்தித்த பிறகு, நீங்கள் அனுபவித்தது என்ன, நாட்டில் இருந்தால் எப்படி ஆகி இருக்கலாம், நாட்டுக்குத் திரும்பிப் போனால் என்ன ஆகும் என்பதை எழுத வேண்டும். விண்ணப்பத்தோடு சாட்சியம் சமர்ப்பிக்கப் போவதாக இருந்தால் அதனைப் பற்றி சுட்டிக்காட்டவும். பொதுவான சூழ்நிலை மட்டும் அல்லாமல், நீங்கள் அனுபவித்த விடயங்களை மையமாகக் கொண்டே எழுத வேண்டும். நீங்கள் எழுதினதை எல்லாமே அகதி அதிகாரி நேர்முகத்தில் விவரமாக விசாரிப்பார்.

வாக்குமூலத்தில் இப்படி விவரமாகத் தான் எழுத வேண்டும். ஆகவே வாக்குமூலம் பொதுவாகப் பெரிதாகிவிடலாம். எப்படியும் தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதை விவரமான காரணத்தோடு நீங்கள் தான் விளங்கப்படுத்த வேண்டும். இது தான் முக்கியம்.

கண்டிப்பாக வாக்குமூலத்தின் பிரதியை எடுத்து கவனமாக வைத்திருக்க வேண்டும். வாக்குமூலம் என்றால், அகதி விண்ணப்பத்தில் முக்கியத்துவம் வாய்ந்த இன்றியமையாத

பத்திரம் ஆகும். ஆகவே நேர்முகத்தில் வாக்குமூலத்துக்கு முரணாகப் பேசினால், உங்களுக்குப் பாதகமாகி விடலாம்.

**5)** மற்ற ஆவணங்கள்

நீங்கள் வெளிநாட்டுக்கு வந்துவிட்டதினால், சாட்சியம் சேகரிப்பது கஷ்டமாக இருக்கலாம். இப்போது உங்களிடம் சாட்சியம் ஒன்றும் இல்லை அல்லது கொஞ்சம் மட்டும் உள்ளது என்றால், புதிதாகச் சேகரிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் நீங்கள் பேசுவது உண்மை என்பதை நிரூபிக்கும் பொருட்டு, முடிந்தவரை பல சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும். சம்பந்தம் இல்லாத விடயம் அல்லது முக்கியம் இல்லாத சின்ன விடயம் போன்றவை இருந்தாலும், சாட்சியமாகச் சமர்ப்பிக்க வேண்டும். அகதி அதிகாரி சாட்சியம் சமர்ப்பிக்கும்படி சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, நீங்களே முடிந்தவரை சாட்சியங்களைச் சேகரித்துச் சமர்ப்பிக்க வேண்டும்.
உதாரணமாகக் கீழ்கண்ட சாட்சியங்களைச் சமர்ப்பிக்கலாம்.

- உங்களது செய்கை, நீங்கள் அனுபவித்த அடக்குமுறை பற்றிய நாளிதழ் செய்தி, பத்திரிகைச் செய்தி
- உங்களது அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள செய்தி
- உங்களது அரசாங்கம் உங்களுக்கு விடுத்த தேடுதல் ஆணை (Search Warrant), பிடி ஆணை (Arrest Warrant) பான்ற அடக்குமுறையின் நோக்கம் வெளிப்படுத்தியுள்ள ஆவணம்.
- நீங்கள் சேர்ந்துள்ள குழுவின் சான்றிதழ் (உங்களது அங்கத்துவம், பதவி, செய்கை ஆகியவற்றை நிரூபிக்கும் ஆவணம்)
- உங்களது முறையீட்டை நிரூப்பிக்கும் ஆவணம் (அடையாள அட்டை, மாணவர் அட்டை)
- வெளிநாட்டு அரசாங்கத்துறை, மனித உரிமைக் குழுவின் அறிக்கை. உதாரணமாக USA அரசாங்கத்துறை, பொதுமன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமைக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை மற்றும் உள்நாட்டுக் குழு அல்லது வெளிநாட்டு அகதிக் குழுக்களின் அறிக்கை.

எல்லா ஆவணங்களிலும் உங்களைப் பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டியது இல்லை. உதாரணமாக, உங்களது குழு தயாரித்த ஆவணத்தில் உங்களது பெயர், பதவி போன்றவையோடு நீங்கள் அனுபவித்த விடயங்களும் விளக்கமாக எழுதியிருந்தால் நல்லது. சாதாரான நாளிதழ் இருக்கும் பட்சத்தில், அதில் உங்களைப் பற்றி குறிப்பிடாவிட்டாலும், சரி. உங்களது குழுவில் உள்ளவர் அடக்குமுறைக்கு உட்பட்டிருக்கின்றார் என்ற செய்தி இருந்தால் போதும். அதேபோல் மனித உரிமைக் குழுவின் அறிவிப்பு இருக்கும் பட்சத்தில், அந்த அறிவிப்பில் உங்களது பெயர் குறிப்பிடாவிட்டாலும், அது முக்கியமான ஆதாரம் ஆகும். உங்களுக்குச் சமமான நிலைமையில் உள்ளவர் அடக்குமுறைக்கு உட்பட்டிருந்தார் என்ற அறிவிப்பு இருந்தால், அது சமர்ப்பிக்கத் தக்க ஆதாரம் ஆகும். மொழிபெயர்ப்பு இல்லாவிட்டாலும், கண்டிப்பாகச் சமர்ப்பிக்கவும். நீங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாத நிலைமையில் இருக்கின்றீர்கள் என்பதை நிரூபிப்பதற்கு இப்படிப்பட்ட ஆவணங்கள் பயனாகும். ஜப்பான் மொழிபெயர்ப்பு இருந்தால், மிகவும் நல்லது. ஆங்கிலத்தில் இருந்தாலும் சரி, வேறு மொழியில் இருந்தாலும் சரி, மொழிபெயர்ப்பு இல்லாவிட்டாலும் சரி, எல்லா ஆதாரங்களையும் அகதி அதிகாரியிடம் சமர்ப்பிப்பது முக்கியம்.

முக்கியமான ஆவணத்தின் மூலத்தைக் கவனமாக வைத்திருக்க வேண்டும். அதன் பிரதியை அகதி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது நேர்முகத்தின்போது, மூலத்தை அகதி அதிகாரியிடம் காட்டி, மூலத்துக்கும் பிரதிக்கும் வித்தியாசம் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும். மூலத்தைச் சமர்ப்பிக்கக் கூடாது.

## 4. தற்காலிகமாகத் தங்கும் அனுமதி

சட்டப்படி ஜப்பானில் தங்கும் அனுமதி இல்லாமல் நீங்கள் அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தால், தற்காலிகமாகத் தங்கும் அனுமதி (Provisional Stay) சில சமயம் தரப்படலாம். ஆனால் அதற்குக் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(1) நாடுகடத்தல் உத்தரவுக்குரிய குறிப்பிட்ட நிலைமை உள்ளது என்று ஐயம்படக் கூடிய நியாயமான ஆதாரம் இல்லாமல் இருத்தல் வேண்டும்
(2) ஜப்பானுக்கு வந்த நாளில் இருந்து[4] 6 மாதங்களுக்குள், அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தல் வேண்டும்
(3) அடக்குமுறைக்கு ஆளாகக் கூடிய ஆபத்து உள்ள பகுதியில் இருந்து நேராக ஜப்பானுக்கு நுழைதல் வேண்டும்
(4) ஜப்பானுக்கு நுழைந்த பிறகு, குற்றவியல் ஆகிய சட்டங்களின்படி கடுங்காவல் தண்டனை, சிறைத் தண்டனைக்கு உட்பட்டிருக்காமல் இருத்தல் வேண்டும்
(5) நாடுகடத்தல் உத்தரவு இன்னும் வழங்கப்படாமல் இருத்தல் வேண்டும்
(6) தப்பித்துவிடலாம் என்பதற்குரிய ஐயம் இல்லாமல் இருத்தல் வேண்டும்

இதில் ‘‘நேராக ஜப்பானுக்கு நுழைதல்’’ என்ற நிபந்தனை உள்ளது. ஆனால் தஞ்சம் கேட்பவருக்கு நேராக ஜப்பானுக்கு வருவது கஷ்டமாக இருப்பதினால், அதனைப் பற்றி பெரிதாகப் பார்க்காத சாத்தியக்கூறு உள்ளது. நீங்கள் ஜப்பானுக்கு நேராக வந்திருந்தால், நேராக வர முடிந்ததற்கான காரணம் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும்.

தற்காலிகமாகத் தங்கக் கூடிய காலம் பொதுவாக 3 மாதங்கள் தான். ஆனால் அந்தக் காலத்தைப் புதுப்பிக்க முடியும். அந்தக் காலம் முடிவடைவதற்கு 10 நாள் முன்பிருந்து அதற்கு விண்ணப்பிக்க முடியும். தற்காலிகமாகத் தங்கும் அனுமதி கிடைத்தால், தடுப்புக்காவலில் வைக்கப்படாமல் நாடுகடத்தல் நடவடிக்கை இடைநிறுத்திவைக்கப்படும்.

தற்காலிகமாகத் தங்கும் அனுமதி கிடைத்தால், அது நிராகரிக்கப்படும்வரை நாடுகடத்தல் நடவடிக்கை இடைநிறுத்திவைக்கப்படும். தற்காலிகமாகத் தங்கும் அனுமதி கிடைக்காவிட்டால், நாடுகடத்தல் நடவடிக்கை இடைநிறுத்தாமல், நாடுகடத்தல் உத்தரவு வழங்கப்படக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது. ஆனால் உங்களது அகதி அங்கீகார விண்ணப்பத்தைப் பற்றி நீதித்துறையில் ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, நாடுகடத்தல் நடக்காது.

## 5. மனிதாபிமான ரீதியில் தங்குவதற்கான சிறப்பு அனுமதி

அகதி அங்கீகாரம் மறுக்கப்பட்டாலும், ஜப்பானில் தங்குவதற்குச் சிறப்பு அனுமதி சில சமயம் கிடைக்கும். ஜப்பானில் தங்குவதற்குரிய சிறப்பான காரணம் இருக்கும் பட்சத்தில்,

[4] ஜப்பானில் இருக்கும்போது, ஏதாவது நிகழ்ச்சி எற்பட்டு அகதியாகிவிட்டால், அந்த நிகழ்ச்சி பற்றி தெரிந்த நாளில் இருந்து.

அதற்கு அனுமதி தரப்படலாம் என்று Immigration சட்டம் விதித்துள்ளது. இருந்தபோதிலும் சிறப்பான காரணம் என்றால் என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக உங்களது 1. பழைய காலத்துப் பதிவு 2. குடும்ப அமைப்பு 3. சொந்த நாட்டின் நிலைமை போன்றவற்றை நீதித்துறை கருத்தில் கொள்ளும் என்று கருதப்படும். உதாரணமாக, அகதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஒருவரின் நாட்டில் யுத்தம் நடந்துகொண்டுள்ளது என்ற காரணமாக, அவருக்குச் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தால், அகதி நடவடிக்கையில் தான் சிறப்பு அனுமதி பற்றி ஆராயப்படும். முன்பு போல் நாடுகடத்தல் நடவடிக்கையில் சிறப்பு அனுமதி பற்றி ஆராயப்படாது.

## 6. நாடுகடத்தல் (Deportation) நடவடிக்கை

அகதி அங்கீகாரம் மறுக்கப்பட்டால் அல்லது மேற்கண்ட சிறப்பு அனுமதி கிடைக்காவிட்டால், Immigrationகு ஆஜராகுமாறு, குற்ற விசாரணைப் பிரிவில் இருந்து கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக அழைப்பு வரலாம். இந்த அழைப்புக்கும் அகதி நடவடிக்கைக்கும் தொடர்பு இல்லை. இது உங்களது சட்ட விரோத தங்குதல் அல்லது சட்ட விரோத குடிநுழைவு பற்றி விசாரிப்பதற்கான அழைப்பு ஆகும். இது நாடுகடத்தல் (Deportation) நடவடிக்கைக்கு உட்பட்டது. நாடுகடத்தல் நடவடிக்கை பொதுவாகக் கீழ்கண்டபடி நடக்கும். (Immigration சட்டம் 27–55ம் பிரிவைக் காண்க.)



**1)** குற்ற ஆராய்வு / குற்ற விசாரணை

முதலில் குற்ற ஆராய்வு, குற்ற விசாரணையின் நேர்முகம் நடக்கும். இது Tokyo Immigrationஇல் நடக்கும்போது, 6ம் மாடியில் உள்ள ஆராய்வு 3ம் பிரிவிலும் குற்ற விசாரணைப் பிரிவிலும் நடக்கும். நேர்முகத்தின்போது, நீங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாத காரணம் என்ன என்பதை அதிகாரியிடம் சொல்லவும்.

**2)** தற்காலிக விடுதலைக்கான விண்ணப்பமும் தற்காலிக விடுதலையும்

வெளிநாட்டினர் Immigration சட்டத்தை மீறினால், பொதுவாகத் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார். தற்காலிக விடுதலை (Provisional Release) என்றால், சில நிபந்தனைக்கு உட்பட்டு விடுதலை ஆகும். தண்டனைச் சட்டத்தில் உள்ள பிணை (ஜாமீன்) போன்றவை. தற்காலிக விடுதலை கிடைத்தவர் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

- 1–3 மாதத்துகு ஒரு முறை Immigrationகு ஆஜராக வேண்டும்.
- வசித்துள்ள மாநிலத்துகு வெளியே போகக் கூடாது. (விண்ணப்பித்தால் பயணத்துக்கான அனுமதி பெற்றுக்கொள்ள முடியும்.)
- வசிப்பிடம் மாற்றும்போது, தகவல் அளிக்க வேண்டும். (முன்கூட்டியே தகவல் அளிக்க வேண்டும். ஆனால் தகவல் அளிக்க வேண்டிய நேரம் அவ்வளவு கடுமையாக இல்லை. நீங்கள் அந்த விலாசத்தில் உண்மையாக இருப்பதை நிரூபிப்பதற்கு வாடகை ஒப்பந்தம் ஆகியவற்றைச் சில சமயம் காட்ட வேண்டும்.)

இந்த விடுதலைக்கு விண்ணப்பித்தால், மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டியிருப்பதன் உத்தரவாதமாக பணம் செலுத்த வேண்டும். அத்தோடு உத்தரவாடமளிப்பவரைத் தெரிவிக்க வேண்டும்.

உத்தரவாதப் பணத் தொகை அதிகப்பட்சம் 3,000,000 yen. இத்தொகை ஒவ்வொருவருக்கு மாறும். எவ்வளவு என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. (அதிகமாகப் பணம் செலுத்த முடியாத பட்சத்தில், தொகையைக் குறைக்க அதிகாரியிடம் கேட்டுப்பார்க்கவும்.). நீங்கள் தப்பிக்காவிட்டால், நடவடிக்கை முடிந்த பிறகு (நாடுகடத்தலுக்காகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பிறகு அல்லது ஜப்பானில் தங்கும் அனுமதி வழங்கப்பட்ட பிறகு), இந்தப் பணம் திருப்பித் தரப்படும்.

உத்தரவாதமளிப்பவருக்குக் குறிப்பாகச் செய்ய வேண்டியது (இழப்பீடு தருவது போன்ற பொறுப்பு) இல்லை. ஆனால் உத்தரவாதமளிப்பவர் உங்களை அந்த நிபந்தனைகளுக்கு உட்படுத்தும்படி சத்தியம் அளிக்க வேண்டும்.

ஒரு முறை தற்காலிக விடுதலை கிடைத்தால், நாடுகடத்தல் நடவடிக்கை முடியும்வரை அந்த விடுதலை பொதுவாக நீடிக்கும். Immigration உங்களைக் கூப்பிட்டு அல்லது நீங்களே ஆஜராகி நாடுகடத்தல் நடவடிக்கை ஆரம்பித்த பிறகும், மேல்முறையீடு உள்ளிட்ட அகதி அங்கீகார நடவடிக்கை முடியும்வரை, நாடுகடத்தல் நடவடிக்கைப் பற்றிய தீர்மானம் பொதுவாக வழங்கப்படாது. ஆகவே அகதி அங்கீகார நடவடிக்கை எல்லாமே முடியும்வரை தற்காலிக விடுதலை நீடிக்கும்.

**3)** பின்பு நடக்கும் நடவடிக்கை

முதலில் நடக்கும் குற்ற ஆராய்வின் விளைவாக, நீங்கள் செய்தது ‘‘சட்ட விரோத தங்குதல்’’, ‘‘சட்ட விரோத குடிநுழைவு’’ என்ற முடிவு எடுக்கப்பட்டால், அடுத்தது குற்ற விசாரணை நடக்கும். குற்ற விசாரணையின் விளைவாக, முதலாவது முடிவு

சரியானது என்ற ஒப்புதல் அளிக்கப்பட்டால், அதற்கு எதிராக, சிறப்பு அதிகாரியின் நேர்முக விசாரணையைக் கோர முடியும். இந்த நேர்முகம் கோராவிட்டல், நீங்கள் நாடுகடத்தல் செய்யப்படுவீர்கள். நேர்முக விசாரணையின்போது உங்களது சட்டத்தரணி, தெரிந்தவர் ஒருவர் உங்களோடு இருக்க முடியும். குற்ற விசாரணையில் அளிக்கப்பட்ட ஒப்புதல் சரியா, இல்லையா என்பதைப் பற்றி இந்த விசாரணையில் ஆராய்ந்து தீர்ப்பு அளிக்கப்படும். குற்ற விசாரணையில் அளிக்கப்பட்ட ஒப்புதல் சரியானது என்ற தீர்ப்பு அளிக்கப்பட்டு, நீங்கள் அதனை ஏற்றுக்கொண்டால், நீங்கள் நாடுகடத்தல் செய்யப்படுவீர்கள். நீங்கள் அந்தத் தீர்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், நீதி அமைச்சரிடம் (சில சமயம் பிரதேச Immigration தலைவரிடம் அதற்குரிய உரிமை ஒப்படைக்கப்படும்) மறு விசாரணையைக் கோர முடியும். நீதித்துறை உங்களது அகதி அங்கீகார விண்ணப்பம் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, உங்களை நாடுகடத்தல் செய்யாது.

# III வினாவிடை

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிப்பவர் / விண்ணப்பித்தவர் அடிக்கடி கேட்கக் கூடிய கேள்விகள் கீழே உள்ளன.

**1) அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கப் போகும்போது, முதலில் குற்ற ஆராய்வுக்குப் போகச் சொன்னார்கள். என்ன செய்யலாம்?**

இதனைப் பற்றி நாடுகடத்தல் நடவடிக்கை என்ற அத்தியாயத்தைக் காண்க. நீங்கள் over-stay (சட்ட விரோதமான தங்குதல்), சட்ட விரோதமான குடிநுழைவு செய்திருந்தால், சில சமயம் விண்ணப்பம் ஏற்காமல், குற்ற விசாரணைப் பிரிவின் குற்ற ஆராய்வுக்குப் போகச் சொல்வார்கள். ஆனால் நாடுகடத்தல் நடவடிக்கை ஆரம்பிக்காமல் தடுக்க வேண்டும். முதலில் அவ்விடத்திலே விண்ணப்பம் ஏற்கச் சொல்லவும்.

**2) அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கும்போது Alien Card தேவையா?**

Alien Card பதிவு செய்த பிறகு தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று Immigration சொல்வதினால், முதலில் Alien Card பதிவு செய்ய வேண்டும். Alien Card எடுத்த பிறகு, வீடு மாறி Alien Cardஇல் உள்ள விலாசம் மாற்றவில்லை என்றால், புதிய விலாசமாக மாற்ற வேண்டும். அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கும்போது, சரியான Alien Card தான் வைத்திருக்க வேண்டும்.

பிரதேசச் செயலகம் (Kuyakusyo, Shiyakusho) என்றால், பிரதேசச் சபைக்கு உட்பட்டது. அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கும் முன்பு Alien Card பதிவு செய்தாலும், உங்களை உடனடியாகத் தடுப்புக்காவலில் வைக்க மாட்டாது. நாடுகடத்தல் செய்ய மாட்டாது.

**3) overstay (சட்டவிரோதமான தங்குதல்), சட்டவிரோதமான குடிநுழைவு செய்தாலும், அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்க முடியுமா?**

முடியும். இப்போது ஜப்பானில் இருக்கின்ற எவராலும் அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்க முடியும். உங்களது விஸா முடிந்துவிட்டாலும் (விஸா புதிப்பிப்பதற்கான விண்ணப்பம் மறுக்கப்பட்டாலும்), நீங்கள் கள்ள கடவுச்சீட்டால் (Passport) வந்திருந்தாலும், விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பித்த உடனே கைதுசெய்யவும் தடுத்துவைக்கவும் மாட்டார்கள்.

**4) விண்ணப்பத்துக்குத் தேவையான ஆவணங்கள் எல்லாமே கிடைத்ததா என்ற சந்தேகம் உள்ளது. உடனடியாக விண்ணப்பிக்காமல், ஆவணங்கள் எல்லாம் கிடைக்கும்வரை காத்திருந்தால் நல்லதா?**

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பிறகும் மேற்கொண்டு ஆவணங்ளைச் சமர்ப்பிக்க முடியும். ஆகவே கூடியவிரைவில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பது தான் நல்லது.

**5) ஆவணங்களை மொழிபெயர்ப்பு செய்ய முடியாவிட்டால் ஏதாவது பிரச்சினை உண்டா?**

வாக்குமூலம் (Statement) உள்ளிட்ட ஆவணங்களை மொழிபெயர்ப்பு செய்வது, விண்ணப்பிப்பவரின் பொறுப்பு என்பது தான் நீதித்துறை / Immigrationஇன் கருத்து. ஆனால் மொழிபெயர்ப்பு செய்வதற்குப் பணம் அதிகமாகத் தேவை. அதனால் எல்லா ஆவணங்களையும் மொழிபெயர்ப்பு செய்வது கஷ்டமாக இருக்கலாம். நீங்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆங்கிலம் அல்லது வேறு மொழியில் எழுதியிருந்தாலும், விசாரணைக்குத் தேவை ஏன்றால், Immigration தான் மொழிபெயர்ப்பு செய்யும் என்று கருதப்படும். இருந்தபோதிலும், ஜப்பான் மொழி அல்லாத ஆவணங்கள் கண்டிப்பாக வாசிக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை. ஆகவே, முடிந்தவரை ஜப்பான் மொழிபெயர்ப்போடு ஆவணங்களைச் சமர்ப்பிப்பது தான் நல்லது. முதலில் உங்களது நண்பர், தெரிந்தவரிடம் மொழிப்பெயர்ப்பு செய்யும்படி கேட்டுப்பார்க்கவும்.

**6) சட்டத்தரணி தேவையா?**

சட்டத்தரணி இல்லாமலும் அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் சட்டம் பற்றிய ஆலோசனை இருந்தால் நல்லது. சில சட்டத்தரணிச் சங்கங்களில் வெளிநாட்டினருக்கான இலவச / கட்டண ஆலோசனை நடக்கும். பக்கத்தில் உள்ள சட்டத்தரணிச் சங்கத்தில் கேட்டுப்பார்க்கவும்.

பொதுவாக ஒரு சட்டத்தரணிக்கு 200,000yen முதல் 500,000yen வரை கட்டணம் செலுத்த வேண்டும். (மற்றபடி மொழிபெயர்ப்பு, போக்குவரத்துக் கட்டணமும் தேவை) சட்டத்தரணிக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு வசதி இல்லை என்றால், குறைந்த அளவிலான நிதி உதவியும் பெற்றுக்கொள்ளலாம். உங்களது சட்டத்தரணியிடம் ஆலோசித்துப்பார்க்கவும்.

**7) ஜப்பானில் உள்ள அரசு சார்பற்ற நிறுவனம் (NGO) எப்படிப்பட்ட உதவி செய்யும்?**

அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தவர், ஜப்பானில் உள்ள NGO, மற்றும் அரசுக்குச் சார்பான நிறுவனங்களிடம் சட்டம், சமூகம் பற்றிய ஆலோசனை, உதவி கேட்க முடியும். உதாரணமாக, JAR, UNHCRஇன் கூட்டாளியாக, அகதி அங்கீகார நடவடிக்கை Immigration நடவடிக்கை, மற்றும் அதற்குச் சம்பந்தப்பட்ட ஏனைய சட்டம் பற்றி, தஞ்சம் கேட்பவரிடம் ஆலோசனை வழங்கியுள்ளது. JARஇன் சமுகசேவகர் அகதியின் உடல்நலம், வேலைவாய்ப்பு, வீடு ஆகிய அன்றாட வாழ்க்கையின் தேவைகளைப் பற்றி ஆலோசனை, உதவியை வழங்குவார். மேலும் உதவி வேண்டுமானால், மற்ற அரசுச் சார்பற்ற நிறுவனங்களிடம்[5] உங்களை அறிமுகபடுத்துவோம். ஏற்கனவே அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்திருந்தால், RHQஇடம் அரசாங்கத்தின் நிதி உதவி கேட்க முடியும்.

[5] Refugees Assistance Headquarters (RHQ), International Social Service Japan (ISSJ), Japan Evangelical Lutheran Association (JELA).

**8) UNHCR எப்படிப்பட்ட உதவி செய்யும்?**

UNHCR Tokyo அலுவலகம், அகதிச் சர்வதேசச் ஒப்பந்தம் பற்றிய ஜப்பான் அரசாங்கத்தின் செயல்பாடு தொடர்பாக, கீழ்கண்ட விடயங்களைப் பற்றி கண்காணித்துள்ளது.

- சர்வதேசத்தில் தஞ்சம் தர வேண்டிய நபரிடம் தஞ்சத்தை அணுகும் வாய்ப்பு அல்லது தஞ்சம் அளித்துள்ளதா?
- அகதி அங்கீகாரத்தின் தீர்ப்பு வரும்வரை, போதுமான வசதி வழங்கியுள்ளதா? (தேவையான தகவலை அணுகும் வாய்ப்பு, தடுப்புக்காவலில் வைக்கப்படாமை, பொருட்களின் உதவி, பிள்ளையின் கல்வி, அடிப்படையான மருத்துவச் சேவை)

அதனால் UNHCR, நீதித்துறையால் மேற்கொள்ளப்படும் அகதி அங்கீகார நடவடிக்கையைக் கண்காணிப்பதோடு, விண்ணப்பித்தவரின் நாட்டின் புத்தம்புதிய தகவல்களை நீதித்துறையிடம் வழங்கியுள்ளது. அத்தோடு UNHCR ஆலோசக கடமையைப் புரிந்து, அகதி அங்கீகாரம் பற்றிய சட்டவியல் கருத்துக்களை Immigration, நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ளது.

தஞ்சம் கேட்பவருக்கும் அகதிக்கும் உதவும் பொருட்டு, UNHCR, JARஒடு ஒப்பந்தம் செய்துள்ளது. கீழ்கண்ட ஆலோசனை வேண்டுமானால், முதலில் JARகுத் தொடர்புகொள்ளவும்.

- அகதி அங்கீகார நடவடிக்கை பற்றிய ஆலோசனை
- அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பின் பொருள் உதவி பற்றிய ஆலோசனை
- சட்ட நடவடிக்கை பற்றிய சட்டத்தரணியின் உதவி
- தற்காலிக விடுதலை பற்றிய ஆலோசனை
- அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பின் ஜப்பானில் வாழ்வதன் சம்பந்தமான ஏனைய தகவல்கள்

**9) அகதி அதிகாரியின் நேர்முகம் என்றால் எப்படிபட்டவை?**

அகதி அதிகாரியின் நேர்முகம் பொதுவாக முழு நாளாக நடக்கும். உங்களது முறைபாட்டை நன்றாகப் புரிந்துகொள்வதற்குப் பல கேள்விகளைக் கேட்பார். உண்மையைத் தவறாமல் தெரிந்துகொள்வதற்கு ஒரே கேள்வியைத் திருப்பித்திருப்பி கேட்கலாம். கேள்விக்கு நன்றாக யோசித்து நேர்மையாகப் பதில் சொல்லி, உங்களது நிலைமையை ஒன்று விடாமல் விவரமாக விளங்கப்படுத்துவது முக்கியம். அகதி அதிகாரியின் நேர்முகம் நடக்கும்போது, உங்களது தாய்மொழியின் மொழிபெயர்ப்பாளர் வருவார். மொழிபெயர்ப்பாளரின் திறமை அல்லது அரசியல் கொள்கை போன்றவை மேல் சந்தேகம் இருந்தால், மொழிபெயர்ப்பாளரை மாற்றும்படி துணிவோடு அகதி அதிகாரியிடம் கோரவும். ஒரு தலைச் சார்பற்ற திறமையான மொழிபெயர்ப்பாளரை வரச் சொல்லி, நேர்முகத்தில் தவறாகப் புரிந்துகொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

நேர்முகத்தில் அகதி அதிகாரி ஜப்பான் மொழியில் குறிப்பெடுத்து, வாக்குமுலத்தைத் தயாரிப்பார். கடைசியாக மொழிபெயர்ப்பாளர் அதனை வாசித்துக் காட்டுவார். வாக்குமுலத்தில் எழுதப்பட்ட விடயங்கள் சரியாக இருந்தால், நீங்கள் அதில் கையெழுத்து இடவும்.

உங்களது சட்டத்தரணி, தெரிந்தவர் போன்ற மூன்றாவது தரப்பினர் நேர்முகத்தில் கலந்துகொள்ள முடியாது. மேல்முறையீட்டின் நேர்முகத்தில் அதற்கு அனுமதி வழங்கப்படும்.

நேர்முகத்துக்காக நன்றாக ஏற்பாடு செய்ய வேண்டும். நேர்முகத்துக்கு முன் ஆவணங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குசெய்து, திரும்ப உங்களது வாக்குமூலம் (Statement) வாசிக்க வேண்டும். அகதி அதிகாரி உங்களது வாக்குமூலம் (Statement) வாசித்து அதில் எழுதப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டே கேள்வி கேட்பார். வாக்குமூலத்தில் எழுதப்படாத விடயத்தை அல்லது அதற்கு முரணான விடயத்தைப் பேசும்போது, நீங்கள் தான் பூர்வமான விளக்கம் அளிக்க வேண்டும்.

**10) தீர்ப்பு வருவதற்கு எவ்வளவு காலம் ஆகும்?**

தீர்ப்பு எப்படி இருந்தாலும், தீர்ப்பின் அறிவிப்பு உங்களிடம் வரும். தீர்ப்பு வருவதற்கு 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகினதும் உண்டு. ஆகவே தீர்ப்பு வருவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைக் குறிப்பாகச் சொல்ல முடியாது. விண்ணப்பித்தவர் தடுப்புக்காவலில் இல்லை என்றால், அகதி நடவடிக்கைக்கு நீண்ட காலம் ஆகுவது தான் சமீப காலத்தில் வழக்கமாக உள்ளது.

**11) விண்ணப்பித்தவரின் நிலைமை எப்படி இருக்கும்?**

உங்களிடம் Temporary Visitor என்ற விஸா இருந்து, விஸா முடியும் முன்பு அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தால், தீர்ப்பு வரும்வரை விஸா புதுப்பிப்பது தான் Immigrationஇன் வழக்கம். அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பிறகு, Designates Activities (குறிப்பிட்ட செயல்கள்) என்ற விஸாவாக மாற்றி தரப்படும். விண்ணப்பத்துக்கு 6 மாதங்களுக்குப் பிறகு வேலை செய்வதற்கான அனுமதி Immigrationஇடம் பெற்றுக்கொள்ளலாம். விஸாவைப் புதுப்பிக்கும்போது, Immigrationகுப் போய் அகதி அங்கீகார விண்ணப்பப் பற்றுச்சீட்டு காட்டவும். புதுப்பிப்பதற்கு ஒரு முறைக்கு 4,000yen அளவில் செலுத்த வேண்டும்.

முதலாவது தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு, விஸா இல்லாதவர் தடுப்புக்காவலில் வைக்கப்படக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது. Immigration பொதுவாக அகதிக்கு விண்ணப்பித்தவரைத் தடுப்புக்காவலில் வைப்பதில்லை. ஆனால் இதனைப் பற்றி உறுதியாகச் சொல்ல முடியாது.

சரியான விஸா இல்லாமல் விண்ணப்பித்த போது, குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்பட்டிருந்தால், தற்காலிகமாகத் தங்கும் அனுமதி வழங்கப்படலாம். ஆனால் தற்காலிகமாகத் தங்கும் அனுமதி என்பது சட்ட பூர்வமான விஸா இல்லை. தற்காலிகமாகத் தங்கும் அனுமதியோடு இருக்கும்போது, நாடுகடத்தல் நடவடிக்கை இடைநிறுத்திவைக்கப்படும்.

அகதி விண்ணப்பம் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, இப்போதைய சட்டத்தின் கிழே பொதுவாக விஸா கிடைக்காது. அதாவது அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்ததன் காரணமாக விஸா பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அகதி அங்கீகார நடவடிக்கை முடியும்வரை, Immigration உங்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்பாது.

**12) விண்ணப்பித்த பிறகு அரசாங்கத்தின் உதவி கிடைக்குமா?**

RHQ என்ற நிறுவனம் (Tel: 03-3449-7015) சாப்பாடு, வீட்டுவாடகை, மருத்துவச் செலவுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. மற்றபடி குறிப்பிட்ட அளவில் முகாமும் (shelter) வழங்கியுள்ளது. மேற்கண்ட தொலைபேசி எண்ணுக்குத் தொடர்புகொண்டு, ஆலோசனைக்கான முன்பதிவு செய்யவும்.

**13)** நோய் வந்துவிட்டால் என்ன செய்யலாம்**?**

உங்களது விஸா, பொருளாதார நிலை பார்க்காமல், ஜப்பான் வைத்தியச் சாலையில் அவசரச் சிகிச்சை செய்யப்படும். ஆனால் அது இலவசம் இல்லை. பிறகு கட்டணம் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட RHQ உதவி தவிர, JAR (Tel: 0120-477-472 / 03-5379-6003), ISSJ (Tel: 03-3760-3471) மூலமாக UNHCRஇன் மருத்துவக் கட்டணத்துக்கான உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடம் கேட்டுப்பார்க்கவும். ஒரு ஆண்டுக்கு மேலான விஸா உள்ளவர் பொதுவாகத் தேசிய ஆரோக்கியக் காப்பீட்டில் இணைய முடியும். தேசிய ஆரோக்கியக் காப்பீடு அரசாங்கத்தால் நடத்தப்பட்டுள்ளது. இதில் இணைந்தால், காபீட்டுப் பத்திரம் வழங்கப்படும். அதனைக் காட்டினால், மருத்துவக் கட்டணம் குறையும் (ஆனால் இலவசமாகாது. மொத்த மருத்துவக் கட்டணத்துக்கு 30 சதவிகிதம் செலுத்த வேண்டும்). இந்தக் காப்பீட்டில் இணைந்தால், உங்களது வருமானத்துக்கு ஏற்ற காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தேசிய ஆரோக்கியக் காப்பீடு பற்றி நீங்கள் வசித்துள்ள பிரதேசச் செயலகத்தில் கேட்டுப்பார்க்கவும்.

அவசரச் சிகிச்சைக்காக மிகவும் அதிகமான கட்டணத்தைச் செலுத்த வேண்டுமானால், வைத்தியச் சாலையின் சமுகசேவகர், RHQ, JAR, ISSJஇடம் ஆலோசித்துப்பார்க்கவும். முதல் சிகிச்சைக்கான கட்டணம் இலவசமாகும் அல்லது குறையும் மருத்துவ முறையும் இருப்பதினால், JARஇடம் கேட்டுப்பார்க்கவும்.

**14)** பிள்ளையின் கல்விக்கு எப்படி செய்யலாம்**?**

விஸாவுக்குச் சம்பந்தம் இல்லாமல், 9 ஆண்டுகளாக ஆரம்பக் கல்வி கற்றுக்கொள்ள முடியும். நீங்கள் வசித்துள்ள பிரதேசச் செயலகத்தில் கேட்டுப்பார்க்கவும்.

**15)** ஜப்பானில் அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பிறகு மூன்றாவது தரப்பு நாடுகளுக்கு **(Canada, USA, Australia)** போக முடியுமா**?**

ஜப்பான் அரசாங்கம் அகதிச் சர்வதேச ஒப்பந்தத்தில் இணைந்துள்ளதினால், ஜப்பானில் அகதி அங்கீகார விண்ணப்பத்தை நிர்வகிப்பது ஜப்பான் அரசாங்கம் தான். ஜப்பான் அரசாங்கத்திடம் தஞ்சம் கேட்காமல், வேறு நாட்டுக்குப் போவதற்கான விஸாவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமானால், அந்த நாட்டுத் தூதரகத்துக்கு (Embassy) போய், அதற்குத் தேவையானது என்ன என்று விசாரிக்கவும்.

கடைசியாக

ஏதாவது கேள்வி இருந்தால், ஏதாவது உதவி வேண்டுமானால், JARகுத் தொடர்புகொள்ளவும்

# பின்னிணைப்பு I முக்கியமான ஜப்பான் வார்த்தைகள்

| | |
|---|---|
| நான் அகதி | watashi wa nanmin desu |
| நான் எனது நாட்டுக்குப் போக முடியாது | watashi wa jibun no kuni ni kaeremasen |
| அகதி அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் | nanmin nintei shinsei o shitai desu |
| நான் அடக்குமுறைக்கு ஆளாகினேன் | watashi wa hakugai saremashita |
| ஆபத்து உள்ளது | kiken desu |
| விண்ணப்பப் படிவம் | shinsei youshi |
| நாடுகடத்தல் (deportation) | taikyo kyousei or kyousei soukan |
| நாடுகடத்தல் நடவடிக்கை | taikyo kyosei tetsuzuki |
| கைது | taiho |
| தடுப்புக்காவல் | koukin |
| சித்திரவதை | goumon |
| மிரட்டல், அச்சுறுத்தல் | kyouhaku |
| உயிர் ஆபத்து | mi no kiken |
| அடக்குமுறை | hakugai |
| குடும்பம் | kazoku |
| அரசாங்கம் | seifu |
| மனித உரிமை | jinken |
| மனித உரிமை மீறல் | jinken shingai |
| சட்டத்தரணி, வக்கீல் | bengoshi |
| அரசியல் கட்சி | seitou |
| இனம் | jinshu |
| மதம், சமயம் | shukyou |
| தேசியம் | kokuseki |
| அரசியல் கருத்து | seijiteki iken |
| விண்ணப்பத்துப் பற்றுச்சீட்டு | juri-hyou |
| அகதி | nanmin |
| அகதி அதிகாரி | nanmin chousa-kan |
| அகதி அங்கீகாரம் | nanmin nintei |
| அகதி அங்கீகார நடவடிக்கை | nanmin nintei seido |
| முடிவு, தீர்ப்பு | kekka, kettei |
| அங்கீகாரம் | nintei |
| அகதி அங்கீகாரத்தின் மறுப்பு | nanmin no nintei o shinai shobun |
| மேல்முறையீடு | igi moushide |
| அகதி அங்கீகார ஆலோசகர் | nanmin sanyoin |
| வழக்கு | saiban |
| தற்காலிகமாகத் தங்கும் அனுமதி | karitaizai |
| தங்குவதற்கான சிறப்பு அனுமதி | zairyu tokubetsu kyoka |
| தற்காலிக விடுதலை | karihoumen |
| பிரதேச Immigration Office | chihou nyuukoku kanri-kyoku |